உ

கணபதி துணை.

முத்துகிருஷ்ணபுரத்தில்

வீற்றிருக்கும்

# சோமசுந்தரேசரந்தாதி.

மூலம்.

பூவைசியர்களில்

உயர்துளுவவேளாளர்வருணத்திலுதயஞ்செய்த

ஆறுகாடு

முத்துகிருஷ்ணமுதலியாரவர்கள்

குமாரராகிய

**சுப்பராயமுதலியாரவர்கள்**

கந்தசாமிப்புலவரைக்கொண்டுசெய்வித்தது.

இஃது

இயற்றமிழாசிரியராகிய

திருத்தணிகை

**விசாகப்பெருமாளையரவர்களாற்**

பரிசோதிக்கப்பட்டு

ஷெ - ஐயரது

விவேகக்கல்விவிளக்க வச்சுக்கூடத்தில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்

பிரமாதீச ஞு தைமீ

1854

உ

சிவமயம்.

# சாத்துகவிகள்.

வேதாகமசித்தாந்த சைவசமயாசாரிய

பீடமாய் விளங்காநின்ற திருவாவடுதுறை ஆதீன வித்வான்

தாண்டவராயசுவாமிகள்செய்தருளியது.

## நிலைமண்டிலவாசிரியப்பா.

பொன்னுலகுய்த்தரத் தன்னுளங்கொளீஇக் ... ... ... *
கடல்படுகொடிய விடமருந்தியவாய்க் ... ... *
கைப்படறக்கைலைத் திப்பியமலையொரீஇ ... ... ... *
வான்முறைபெயச்செங் கோன்முறைசெலுத்தும் .. *
வழுதிதன்மதுரைப் பழுதின்முற்சங்கத் ... ... *
திறையனாரெனவே யறைதரும்பெயர்தரீஇ ... ... *
வீற்றிருந்தினிய கோற்றேனிகர்க்கும் ... ... ... *
செந்தமிழ்ச்சுவையினை முந்துறப்பருகியும் .... *
ஆவலருமே நாவலூர்நம்பியைத் ... ... ... ... *
தமிழினெற்பாடுக விமிழ்கடற்புவியினென் ... ... *
றேருதியத்தமிழ்க்கோர் மாதுதன்மனைக்கே ... ... *
கரவுறுசந்தா யிரவிடைச்சென்றும் ... ... ... *
வருந்துறுபசிக்குத் திருந்துசோறிரந்திடேஉம் ... ... *
ஆற்றிடுபொன்குளந் தோற்றிடக்கண்டும் ... ... *
செங்கல்செம்பொன்னாய்த் தங்குறப்புரிந்தும் ... *
முதலைகோட்பட்ட மதலையைமீட்டும் ... ... ... *
நதியிடைகீறி வதிவிடவியற்றியும் ... ... ... *
இன்னும்பலவாத் துன்னும்பணிசெயூஉ ... ... *

இன்றமிழ்க்கேமகிழ் துன்றினனாகித்... ... ... *
தடமுறும்வாளை திடமுடனெழூஉக் ... ... ...*
கஞ்சத்தவிசிடை விஞ்சுறவமர்ந்த ... ... ... *
அனத்திரள்சாடிச் சினத்தின்மேற்றாஅய்க் ... ...*
காத்துறுவட்டத் தேத்தடைகிழீஇக்...... ... ...*
கண்ணகல்விசும்பி னண்ணுறுதோற்றம் ... ... *
மறக்களத்துற்றுப் புறக்கொடாதெதிர்ந்து ... ...*
போர்த்தொழில்செய்திறுஞ் சீர்த்திகொள்வீரன்... *
சூரியற்பிளந்தே வீரவொண்சுவர்க்கம்... ... ...*
செல்வது துணையு நல்வளம்படைத்த.. ... ... *
கொத்துறுபுகழ்சேர் முத்துகிருட்டினபுரத்... ...*
தன்பரேத்தெடுப்ப வின்பின்வீற்றிருக்கும் ... ...*
சந்தமார்சோம சுந்தரேசற்குக்.. ... ... ... *
கட்டளைக்கலித்துறைச் சட்டவந்தாதி ... ... ...*
கந்தசாமிப்பேர் வந்துறுகவிஞனிற்.. ... ... *
பாடுவித்துக்குகன் வீடெனுந்தணிகையின் ... ...*
நயத்தகுசங்க வியற்றமிழ்க்குரவனென் ... ... *
றியாவரும்வழுத்த மேவுபுதன்பால்.. ... ... *
உற்றமாணாக்கர்க் கற்றமின்மகிழ்வான் ... ... ...*
இலக்கியவிலக்கணம் புலக்கொளப்புகட்டி ... ... *
இசைபெறுபுலமை திசைதொறுநடாத்தி... ... *
வீரசைவத்தின் சீரிஃதென்றும்.. ... ... ...*
பொய்யில்சைவத்தின் மெய்யிஃதென்றும் ... ...*
அத்துவிதத்தின் சத்திஃதென்றும்... ... ... *
தெற்றெனவுணர்ந்து குற்றமற்றொளிரும்.. ... *
நிசானுபூதிவாழ் விசாகப்பெருமாள் .. ... ...*
ஐயனாற்சொற்பொருள் செய்யவாராய்வித்.. ... *
தச்சினிற்புலவர் மெச்சுறப்பதிப்பித் ... ... .. *
துலகினிலென்று நிலவுறச்செய்தனன்.. ... ... *
பண்டைநற்பாலித் தொண்டைநன்னாட்டிற்... ...*
கச்சிமாநகர்க்குப் பச்சிமதிசைவயின்... ... ... *

முக்காவதத்தி னெய்க்காவளம்பெறாஉ... ... ...*
வெண்டுகிற்கொடியு மொண்டொடிக்கொடியும் ... *
மாடமீமிசையு மாடரங்கத்தும் .. ... ... *
படாதினிநுடங்குஞ் சடாரணியத்துறை ... .. *
முத்துகிருஷ்ணமான் மெய்த்தவப்பேற்றால்... ...*
தாளாண்மையின்மிகு வேளாண்மரபு .. ... ... *
புகழ்பெறத்தோன்றித் திகழ்தருகுரிசில் .. ... *
ஒழுக்கமுமன்பும் வழுக்கறுவாய்மையும் ... ...*
குறைவறுசெல்வமு நிறைதருமாண்பும் .. ... ...*
சீலமுந்தவமும் வாலியதருமமும்... ... ... *
கற்றவர்விரும்ப வுற்றனன்சிறந்தோன்... .. ...*
சோமசுந்தரனுஞ் சாமிதாட்டுணைக்கே... ... ... *
கருத்தெலாமமைத்த திருத்தமார்புனிதன் .. ... *
குப்பராவுஞ்சீர்ச் சுப்பராயப்பேர் .. ... ... *
தாங்கியிப்புவிக்க ணோங்கிவாழ்பவனே... ... ...*

சென்னை யூநிவர்சிட்டியென்னுஞ்சாஸ்திரக்

கல்விச்சாலையில்

தமிழ்த்தலைமைப்புலமைநடாத்தும்இயற்றமிழாசிரியராகிய

திருத்தணிகை

விசாகப்பெருமாளையரவர்களியற்றியசெய்யுட்கள்.

நேரிசையாசிரியப்பா.

தெண்டிரைசுருட்டுந் தண்கடல்வளாகத்... ... *
தெண்டபுவழுக்குடம் பொன்றிமேயாவா ... *
தூசவிற்பல்கா ரேந்தியுழலு .. ... ... *
மாசொரீஇயின்பந் திளைப்பமன்பலதக் ... *

கருள்புரிந்திடுவோ னருளுருவெடுத்தே... ... *
யிருடெறுமிரசித விருங்குவடிகடந்து ... ... *
சோமசுந்தரனென நாமம்புனைந்து... ... *
விண்டொடநிவந்த திண்டிறற்புரிசையு... ...*
மண்டுகராம்பொரு குண்டுநீரகழு... ... *
மும்பரினிவர்படி யுறழுஞ்சிகரியுங் ... ...*
கொம்பனாராடல் பயில்செய்குன்றமுங் ... *
கந்துகொல்வயமாக் கதுவுஞ்சூழலு ... ... *
நந்துபொற்றசும்பு நலங்கிளர்குறடுங்... .. *
கடிமுரசியம்பு மகன்மணிக்கடையும்... ... *
படியறுபல்வளங் குழூஉங்கூலமும் ... ... *
வியப்புத்தலைசிறந்த வேந்தர்மாளிகையுந்... *
துயக்கில்சைவமா தவர்தொகுதலனுஞ்... ...*
சாறுவேள்வி வீறுதெருக்களு .... ... ... *
மகந்தெளியந்தணர் மகம்பயில்சாலையும்... *
வாவியுங்குளனுந் தேவராலயமு... ... ... *
நிலவுந்தென்றலுங் குலவரமியமுங்... ... *
கண்ணுளர்கணிகையர் வுண்ணங்கடுப்புக் ... *
களிமயிலகவிய வளிமுரல்பொழிலுந் ... ...*
தெளிநிலாமணிகுயின் றெளிர்குட்டிமமுங்... *
கெழுமியமுத்து கிருட்டினவண்பதி ... ...*
விழுமியதெனஅத் திருவுளம்வியந்து... .. *
நண்ணுபுவிளங்கு கண்ணுதற்பெருமான் ... *
கொழுநருப்பிலிற்றுங் கொன்றைமிலைச்சியோன்
றொழுதகுபரம துரியங்கடந்தோன்... ... *
றூட்டுணைக்கன்பு தழையவந்தாதித்... ... *
தோட்டலொலியல் சூட்டுவித்தனன்... ... *
மங்கையராடுறு மாண்பமைவாவியிற் ... ...*
பங்கயந்திகழ்சடா ரணியப்பதியோ... ... *

ணண்டரும்வேட்குந் தொண்டைநாடுடையோன்
கொண்டலுங்காவும் வெள்குறுகொடையோன். *
வெங்கலிதுரக்குஞ் செங்கைமேழியோன் ... *
கொங்குபில்குசெங் குவளைத்தாரினன் ... ... *
மாவைசுவரிய மன்னிப்பொலிந்த... ... *
பூவைசியரிற் பொருந்துயர்துளுவ ... ... *
வேளாளர்க்கர சாகிமிளிர்தரு .. ... ... *
தாளாளன்கிளை தாங்கிப்புரப்போன்... ... *
வையப்போர்க்கு மலிபெரும்புகழோ... ... *
ஐயங்கடியு மறிவுநூலுணர்ந்த... ... ... *
முத்துகிருட்டின னென்னுமூதக்கோன்... ... *
மெய்த்தவப்பேற்றின் மேதகுதநயன் ... ... *
விப்பிரர்ப்பராவிய மெய்ம்மையாளன் ... *
சுப்பராய சுகுணவரோதயன் .. ... ... *
சிந்தையருத்தி சிறப்பக்... ... ... ... *
கந்தசாமிநற் கவிஞனைக்கொண்டே ... ... *

## எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

காமசுந்தரன்முத்துகிருட்ணவள்ளல்... ... ... ... *
காண்முளைசடாரணியப்பதியான்வாசத்... ... ... *
தாமசுந்தரபுயத்தோன்சுப்பராய... ... ... ... *
சதுரனன்பாலந்தாதிதன துதாதை ... ... ... *
நாமசுந்தரம்பெறநன்கமைத்தவூர்வாழ்... ... ... *
நம்பனூர்க்கந்தாதிநவிலருஞ்சீர்ச்... ... ... *
சோமசுந்தரர்க்கியம்புகென்னக்கந்த ... ... ... *
சுவாமியெனும்புலவனன்பாற்சொற்றுன்மாதோ ... *

### அஷ்டாவதான

### வீராசாமிசெட்டியாரவர்கள்பாடியசெய்யுட்கள்.

### ஆசிரியவிருத்தம்.

வால்வளையுயிர்த்தவெண்டரளநிலவுமிழமரு ... ... *
மலியாம்பன்முகையவிழ்ந்து ... ... ... .. ... *
வரியளிவிருந்தினிதருந்தநறவந்தூற்று ... ... ... *
வயன்முத்துகிட்ணபுரிவாழ் ... ... ... ... ... ... *
கோல்வளையிடத்திலகும்சோமசுந்தரவண்ணல் ... *
குணாகழற்கொருசெந்தமிழ் ... ... ... ... ... *
குலவுஞ்சடாரணியமென்னுநன்னகரில்வரு ... ... *
குரிசில்பூவைசியர்தமிற் ... ... ... ... ... ... *
சால்வளையவுழுமேழியுயர்துளுவவேளாளர் ... ... *
தவமன்னுபேறுமெனத் ... ... ... ... ... ... *
தருமமொருவடிவெடுத்தெனவரும்புயல்பெருந் ... *
தகைசுப்பராயவள்ளல் .. ... ... ... ... .. *
பால்வளையுமின்சொலினுரைக்கெனவுரைத்தனன் ... *
பரவுமந்தாதிச்செயுள் ... ... ... ... ... ... ... *
பத்திஞானந்தழையவளர்கந்தசாமியாம் ... ... *
பாவலர்கடம்பிரானே ... ... ... ... ... ... *

விண்வளங்கண்டுநனிநகுவதெனவொள்ளிதாம் ... *
வெள்ளிவெண்சுதைமாடமும் ... ... ... ... *
வேலையெனவான்முகந்தருவளையெனத்தாரை ... ... *
நீச்சொரிகிடங்குமெயிலும் ... ... ... ... ... *
கண்வளங்கூர்முத்துகிட்டினபுரத்துவரு ... ... *
கண்ணுதற்கந்தாதியாங் ... ... ... ... ... *
கற்பனைத்தமிழ்கந்தசாமியறிஞன்றனாற் ... ... ... *
கவினுறப்பாடுவித்துப் ... ... ... ... ... ... *

பண்வளங்கொளமிஞிறுபாடுதண்சோலைபுடை ... *
பயில்சடாரணியநகர்வாழ் ... ... ... ... *
பருணிதன்பூவசியவுயர்துளுவவேளாளர் .. ... ... *
பாக்கியமெனச்சிறந்தோன் ... ... ... ... ... *
பெண்வளம்படைமதனனிகர்சுப்பராயவேள் ... *
பேசுதணிகையின்விசாகப் ... ... ... ... ... *
பெருமாளியற்றமிழ்ப்புலவர்பெருமான்றனூற் .. ...*
பெட்பொடாய்வித்தனனரோ ... ... ...... ... *

சேமங்கலம்- வித்துவான்.

நாராயணமுதலியாரவர்கள்பாடியது.

திருவளர்முத்துகிட்ணமாலளித்த ... ... ... ... *
சேய்சடாரணியமாநகரான் ... ... ... ...*
மருவளர்குவளைமாலைதாழ்சுப்ப... ... ... ... ...*
ராயவேண்மனங்களிதுளங்கப் ... ... ... *
பெருவளமருவும்பிதாப்பெயரூர்வாழ் ... ... *
பிறையணிவேணியனடிகட் ... ... ...*
கொருவளங்கொளுமந்தாதியாந்தொங்க... ... ... *
லுளூற்றுவித்தணிந்தனன்மாதோ... ... ...*

திருநீர்மலை.

கோபாலகிருஷ்ணகவிராயரவர்கள்பாடியது.

மதிதவழ்மாடச்சடாரணியத்தில் ... ... ... *
வாழ்முத்துகிட்ணமாலளித்த ... ... ... *
அதிபணுங்குவளைத்துளுவவேளாள ... ... ... ...*
ரருங்குலதிலகனுவலர்க்கு... ... ... ... *
நிதிதருசுப்பராயவேள்பிதாப்பேர்... ... ... ...*
நீணகர்வாழ்பரனடிக்குத் ... ... ... *
துதிதருதமிழந்தாதியாந்தொங்கல்... ... ... ...*
செய்வித்துச்சூட்டினனன்றே... ... ... ...*

## தில்லையம்பூர்ச்

## சந்திரசேகரகவிராஜபண்டிதர் பாடியசெய்யுட்கள்.

### ஆசிரியவிருத்தம்.

செப்பராவியவைவேற்கொங்கைவிழியுமைபாகனுஞ்... ...*
சேர்ந்ததேவை... ... ... ... ... ..*
அப்பராவணிவேணிமுத்துகிருட்டினபுரிவா... ... ...*
ழரனைச்சேவித்... ... ... ... ...*
துப்பராபரவெனத்தோத்திரிக்கவந்தாதித்தெரியல்... ...*
சூட்டுவித்தான் .. ... ... ... ...*
சுப்பராயக்குரிசில்புகழ்கந்தசாமியெனுந் ... ...*
தூயோன்றன்னல் ... ... ... ... ...*

( சந்தவிருத்தம். )

மங்களமாகியசெங்குவளைத்தார்மார்பினிலணிமதனன் ... *
மகிதலநனிபுகழ்கின்றசடாரண்ணியமதிலுறைவள்ளல்...*
திங்களெனத்திகழ்நதிகுலமதில்வருசீர்பெறுகுணநிதிநற்...*
செயமிகுமுத்துகிருட்டினபூபதிசெய்தவமேயுருவாய்த்*
துங்கியசுப்பராயமகீபதிதண்டமிழ்தேர்கந்த ... ... .. [ள்
சாமியெனும்புகழ்நாவலனற்றன்றந்தையியற்பெயர்கொ
துங்கமுறுந்தலமதிலுறுமுக்கட்சோதிசிவன்சோம ... ...*
சுந்தரன்மலரடிமிசையந்தாதித்தொடைவனைவித்தனனே.

—

சாத்துகவிகள்

முற்றிற்று.

உ

கணபதி துணை.

# சோமசுந்தரேசரந்தாதி.

காப்பு.

இருகொம்பினையிருபால்வைத்தசெயண்ணலிற்குமுற்றேன்,
றொருகொம்பினனடிபேணியந்தாதியுரைத்துமலர் ... ...*
வருகொம்புறைமுத்துகிட்ணபுரீசர்க்குவாமமலை ... ... *
தருகொம்பொளிர்சுந்தரேசர்க்கந்தாதியில்சங்கரர்க்கே ...*

திருவார்கமலப்பொகுட்டுமென்சூட்டுச்சிறையனஞ்சேர்.. *
மருவார்தடந்திகழ்முத்துகிருட்டினமாநகரிற் ... ... *
கருவார்ந்திடாதெமைக்காப்பான்கயிலையொரீஇக்கருணை,. *
யுருவாயமர்சுந்தரேச்சுரன்றுளெம்முயிர்த்துணையே ... (௧)

துணையாம்பிறவிக்கடல்வீழ்ந்திருவினைச்சூழ்திரையூ. ... *
டணையாநமனெனும்வன்மீனலைப்பவயர்பவர்க்குப் ... *
புணையாகியெய்துமுத்துகிருட்ணபுரீசனிரு... ... *
திணையாம்பொருட்கணிறைசோமசுந்தரசிற்பரனே ... (௨)

பரமேயமூவர்கள்சூட்டும்பசுந்தமிழ்ப்பாவொடுநல்... *
லுரமேயிலாதுழலென்புன்கவியுமுவந்தருள்வாய். ... *
திரமேவுகண்டிகைபோடென்புமாலையுஞ்சேர்த்திடலால். *
வரமேவுமுத்துகிருட்ணபுரத்தொளிர்மாணிக்கமே ... (௩)

மாணிக்கமார்முத்துகிட்ணபுரீசமடந்தையர்மால் ... *
பேணிக்கருக்குழிவீழ்வேற்கருள்செய்பிரமபுரத்... ... *
தோணிக்கண்மேவிமுடியினிற்சோமனைச்சூடிவிரி ... ...*
வேணிக்கட்கங்கையணிசோமசுந்தரவித்தகனே... ... (௪)

வித்தகன்முத்துகிருட்ணபுரத்தினின்மேவமலன் ... ... *
நித்தனந்நான்முகன்சீதரன்சங்கரனீடுருக்கொண்... ... *
டெத்தகையாருயிரும்படைத்துப்புரந்தேயழிப்போன்.. *
முத்தர்வணங்குநடராசனெங்கண்முதற்றெய்வமே ... (௫)

முதலாதிநீயெனக்கியான்றெண்டனுதலின்மொய்புலனும். *
புதலார்வனத்தென்மனக்கரிமாழ்கிப்புகாதுனது... ... *
பததாமரைச்செயலின்பரிசுய்த்தருள்பைம்பொன்மணிப்.. *
புதவாருமுத்துகிருட்ணபுரேசபுராதனனே... ... (சு)

புரமூன்றெரித்திடுபுன்னகையாளபொருப்புவில்லார் ... *
கரமூன்றுகண்ணமறையந்தமூன்றுன்கழலெனது ... *
சிரமூன்றுநாளென்றுமுத்துகிருட்டினச்சீர்நகர்ச்சுந் ...*
தரமூன்றவத்தையளற்றுழுநெஞ்சத்தளர்வறவே... ...(எ)

தளராமலகநினைச்சிந்தனைசெயச்சன்மமெற்கு ... ... *
வளராமலகத்துடனேகெடச்செய்கவாழுனைக்கைக் ... ...*
கிளராமலகமெனக்காணமுத்துகிருட்ணபுரத்... ... ...*
துளராமலகற்றவர்கட்கருள்செய்தொளிர்சுடரே... ...(அ)

சுடர்மணிச்செப்பெனுங்கொங்கையுமேகலைசூழ்ந்தமணிப்*
படவரவல்குலுங்கொண்டுமின்னார்தரும்பாசமெனுந் ... *
தடமதிலாழுமெனையுன்கழற்கரைதன்னிலுய்ப்பாய் ... *
கடகரிசேர்முத்துகிட்ணபுரிக்கொருகாவலனே... ... (கூ)

காவலனாகிவிண்ணுள்பவன்மாலெண்கணன்முதலா ... ...*
யாவருமுய்பொருட்டன்றேவிடத்தையெடுத்தயின்றான். *
சேவலனன்முத்துகிட்ணபுரீசனவன்றிறத்தே... ... *
யாவல்கொள்வாயிலையந்தோநெஞ்சேயுனக்கையமென்னே()

ஐயமிலாதுனையேபரமென்றுனடியிணைசேர்ந்... ... *
துய்யவகைசற்றறியேனென்றாலுமுனதருளால் ... ...*
வையமிசைப்பிறவாதெனையாட்கொண்மழுமறிமான் ... *
கையவனேமுத்துகிட்ணபுரீசமுக்கண்மணியே... ... (யக)

கண்ணயிருக்கமுலைக்கோடுபாயக்கழைநிகர்தோட்.. ...*
பெண்ணகலல்குற்கடன்மூழ்கிப்பித்துறும் பேதையெற்குத்
தண்ணருள்செய்முத்துகிட்ணபுரேசசதோதயனே... ... *
யெண்ணமரன்பரிதயாரவிந்தத்திருப்பவனே... ...(யஉ)

இருப்புடையார்வரினுந்தனந்தந் துயினெந்தனமாம்... ...*
பொருப்பினைக்கொண்மியெனுவிலைமாதர்பொதுநலத்தி
விருப்பினைநீக்கியுன்றாட்கணெனக்குவிருப்பருள்பூந்... [ன்
தருப்பொழிலார்முத்துகிட்ணபுரீசதயாநிதியே... ...(௧௩)

நிதிதேடவேண்டித்திரிவீரொண்டிக்குமந்நீணிதியாற்... *
கதிதேடலாகுங்கொன்மண்பெண்ணிறலுங்கரிசறுநன் ...*
மதிதேடலாகுங்கொன்முத்துகிருட்டினமாநகராம். ... *
பதிதேடிவாழ்சுந்தரேச்சுரன்பாதத்தைப்பற்றலற்றே (௧௪)

அற்றேயெனதெனல்யானெனன்முற்றுமறப்புனிதம் ... *
பெற்றேநினைத்துதிசெய்தற்கருள்செய்பிறங்குகலை... ... *
கற்றேசிலார்புகழ்முத்துகிருட்ணக்கடிநகர்வா... ... *
புற்றேயறிவுருவாய்க்கிளர்ந்தோங்கியவுத்தமனே... ...(௧௫)

உத்தமமெய்த்தவம்பேணுதுழூடருறவுகொண்டு... ...*
மத்தமனத்தினனேனற்குனதருள்வாய்க்குங்கொலோ... *
நித்தநிருமலநிட்களஞானநிராமயனே... ... ... ...*
சுத்தர்கள்வாழ்முத்துகிட்ணபுரேசநற்றாயவனே ...(௧௬)

தூயவெண்ணீறணிமேனியன்வாணிதுணைவனொடு... ...*
மாயவன்றேடியறியானிருண்டமனத்தவர்க்குச் ... *
சேயவன்றூபரசங்கமந்தோறுஞ்செறிந்தினிது .. ... *
மேயவன்முத்துகிருட்டினமாநகர்மேலவனே ... ... ௧௭)

மேலணிவேழவுரியான்பொற்றாணின்விரைந்தெழுந்து... *
பாலனைப்பாலித்திரணியற்செற்றவன்பாடழிபா... ...*
வேலமிடச்சரபத்தினுருக்கொண்டடற்றுபெம்மான் ... *
சீலமுலாமுத்துகிட்ணபுரிக்குட்டிகழ்தெய்வமே ... (௧௮)

தெய்வமொன்றின்றெனநாத்திகம்பேசித்திரிபவருக் ... *
குய்வகையுண்டுகொன்முத்துகிருட்டினவொண்புரத்தான் *
மெய்வருநன்னெறிசேர்ந்துளம்வாக்குமெய்யொன்றுபடுஞ்
சைவர்களேயொப்பிலாவின்பவீட்டினிற்றங்குநரோ...(௧௯)

நரையேபொதுளித்தடியூன்றிப்பற்கணழுவியுடற் ... ...*
றிரையேறுமுன்னமறைகாணருநின்செழும்பததா ... *
மரையேயருள்செய்திமுத்துகிருட்டினவண்புரியாய்... *
வரையேவிலாக்கொளரசேவிளங்குமைவத்திரனே......(௨௰)

வத்திரமைந்துடையானுதற்கண்ணின்மணக்குமல ... *
ரத்திரனைப்பொடித்திட்டோனடிமுடிமாற்குமவன் .. *
புத்திரனுக்குமெட்டான்முத்துகிட்ணபுரத்திறைவன் ...*
சித்திரகாயத்தின்றோலுடையான்செகதீச்சுரனே ... (௨௧)

சுரமதில்வல்லநல்யாழ்ப்பாணற்கிந்தனச்சும்மைமுன்னாள்.*
வரநதிவாழ்முடிமீதேற்றிக்கூடன்மறுகினுற்றோன் ... *
திரமுறுமுத்துகிருட்ணபுரீசன்சிரமதனைக் ... ... ..*
கரமதிலேந்தெம்பிரானெங்குடிமுற்றுங்காப்பவனே..(௨௨)

பவமெனும்பாழ்ங்கிணற்றூடேவிழுந்துபுன்பாவையர்தங்*
கவையுறுமல்குலராத்தீண்டப்பட்டுக்கருத்துமருண் ... ...*
டவமடைவேற்குன்பதமருந்தீந்தருளாய்நிவந்தோங் ... *
குவமையின்முத்துகிருட்ணபுரிக்கணுயர்சுத்தனே ... (௨௩)

சுத்தமிலங்கியமுத்துகிருட்டினத்தொல்பதிவா ... ...*
ழுத்தனைநித்தனைச்சுந்தரநாதனையானந்தனை ... ..... *
முத்தனைப்புத்தமுதொப்பானையாதிமுடிவிலனைக் ... *
கத்தனையேத்துநரோவினைக்கட்டறக்காண்குவரோ... ...(௨௪)

காணப்படுவதுங்காண்பானுங்காட்சியுமாகிமறை ... ...*
காணப்படாமனின்றோன்சரணீயெனக்காதலியா ... *
வீணர்க்கிதயமிரங்கான்விபுதர்வியனுலகு ... ... .. *
நாணக்கிளர்முத்துகிட்ணவளம்பதிநாயகனே ... (௨௫)

நாயகனாகியநீநிற்கவும்விலைநாரியர்போற் .. ... ... *
றாயகட்டேவருதேவனைப்பேணறகைமையதோ ... ...*
தூயகமேவியசுந்தரன்றூததொடரரியாஞ்... ... ... *
சாயகனேமுத்துகிட்ணபுரத்துறைசங்கரனே ... ...(௨௬)

சங்கரிபங்கயன்றாழ்முத்துகிட்ணபுரித்தலைவ .. ... *
சங்கரிபங்கவருள்கூறொன்பாழ்மனந்தங்கநின்வ... ... *
சங்கரிபங்கமுறச்செற்றவதமியேன்பவத்தைச... ... ..*
சங்கரிபங்கநிகர்பாசத்தோட றத்தற்பரனே... ... (உஎ)

பரமாகிப்பாலிற்சுவைபோலவெங்கும்பரந்துறைவோன் *
பிரமாவினோர்முடியைக்கொய்திலங்குகிர்ப்பிஞ்ஞகனீள் ..*
சிரமாலையன்றிருமான்மலர்க்கண்ணொளிர்சேவடியோன்...*
வரமாருமுத்துகிருட்டினமாநகர்வானவனே... ... (உஅ)

வானத்தவர்முடிதாழ்த்துவணங்குமருக்கமழ்பூங் ... *
கானத்தலர்கற்பகநீழல்வாழ்க்கைகருதுகிலேன் ... [ன்
ஞானத்திலங்குநின்றொண்டர்கட்காட்செய நான்விழைந்தே
மோனத்தமுத்துகிருட்ணபுரிவருமுன்னவனே ... (உகூ)

முன்னவனேயெவருக்குமெவைக்குமுரண்புலனும் .. ...*
பன்னரும்வேளிர்கொடுமைக்குடைந்துநின்பாலடைந்தே.*
னுன்னருளுள்ளக்குறிப்பறியேன்மதியூரநிமிர் ... ... *
பொன்னரணார்முத்துகிட்ணபுரத்தமர்புண்ணியனே...(௩௰)

புண்ணியருள்ளத்திருப்பவன்மோகப்புணரியுற்றோர் ... *
நண்ணியவன்மனத்துள்ளணுகானளிநாண்மலரிற் .. ...*
பண்ணியன்முத்துகிருட்ணபுரிக்கட்பணிந்தவருக் ... *
கெண்ணியவெண்ணியவாங்கருள்செய்யெம்பிருந்தவனே ..()

தவமிலன்ஞானச்சதிரிலனன்புதனையுமிலன் ... ... *
சிவசிவவென்னவுரைத்திலனின்னைத்தெரிசித்தில... ... *
னவமதிலாழ்கொடியேனையுநீதடுத்தாள்வைகொலோ ...*
பவமகன்முத்துகிருட்டினமாநகர்ப்பண்ணவனே ... (௩உ)

பண்ணவர்போற்றிளையான்குடிமாறன்படர்மனையி... *
னண்ணருநல்விருந்தானவனேமறைநாலும்புகழ்... ...*
பெண்ணமர்மேனியனேயெளியேன்றன்பிறப்பறவே... *
தண்ணருள்செய்முத்துகிட்ணபுரத்துத்தனிமுதலே...(௩௩)

முதலீறளவொப்புவப்புவெறுப்பின்முழுமுதலே ...... *
சிதலாதிப்பல்பிறப்பாங்கோடையால்வெம்புதீயனை நின் *
பததாமரைநிழல்சாரவைப்பாய்செம்பவர்சடையா ... ... *
யிதமாருமுத்துகிருட்ணபுரத்துளிறையவனே ... ...(௫௪)

இறையவனேயுலகேழினுக்குமெழுதருநான் ... ...*
மறையவனேயெண்புயத்தவனேயெழில்வாய்ந்தகளக் ... *
கறையவனேநுதற்கண்ணவனேயெனக்கைக்கொண்முடிப்*
பிறையவனேமுத்துகிட்ணபுரத்தெம்பெருந்தகையே. (௫௫)

தகையார்கருணைக்கடலேதமியன்சழக்குமலப் ... ... *
பகையாலுளைந்துளமெய்த்தனன்றேசொல்பசுபதியே ...*
நகையாழிமாற்கருணாயகனேயொளிர்நன்மணியின் ... *
வகையாருமுத்துகிருட்ணபுரத்தினில்வாழ்பவனே .. (௫௬)

பவனரியிந்திரனாதியரேத்தும்பரமனப்பன் ... ... *
சிவன்வரனீசனனாதிசெஞ்சோதிதிகம்பரன்வந் ... *
தவமறுத்தேதன்னடியென்முடிக்கணியாக்கினன்மா ... *
தவமிகுமுத்துகிருட்ணபுரத்தினிற்சார்ந்தவனே ... (௫௭)

சார்தருமாணவக்கங்குலையான்சிவசம்புவெனு ... ... *
மேர்தருசெஞ்சுடராலேயொழிப்பனிமைக்குளெனக் ...*
கூர்தருவஞ்சினங்கூறிவந்தேனின்குறிப்பறியேன் ... *
சீர்தருமுத்துகிருட்ணபுரத்துறைசின்மயனே... ...(௫௮)

மயனார்திருமிதமாநெடுஞ்சூளிகைமாளிகைசேர் ... ... *
நயனார்தருமுத்துகிட்ணபுரத்தைநயந்துறைவோ ... ...*
யயனாதியர்துதிசெய்சோமசுந்தரவற்புதநின் ... ... *
வியனாரடியர்பணியாற்றவென்னைவிடுத்தருளே ... (௫௯)

விடாதுநிழலிற்றொடர்ந்துவருத்தும்வினைப்பிணியே ... *
தொடாதெனைநீவிடுத்தேகுகயானிளந்தூமதியார் ... *
சடாதரன்முத்துகிருட்டினமாநகர்தங்கமலன்... ... *
கடாமுமிழாம்பலுரியாளன்முன்னர்க்கழறுமுன்னே (௬௰)

முன்னுங்கதிர்மதிமண்புனலாரழன்மூரிவளி ... ... ...*
மன்னும்வெளியியமானனெனுமெண்வடிவுகொண்டோன்,
பொன்னுண்பணிபுரிமுத்துகிருட்ணபுரிக்கிறையோன் ...*
மின்னுண்மருங்குலுமைபாகனென்னுளமேயவனே...(௬௧)

மேயவொண்மந்தரம்வெள்ளிப்பொருப்புவிளங்குதில்லை. *
யாயதென்கச்சிபழமலையாரூரமர்ந்துறைவோன்... ... *
வாயதின்மாவடுக்கௌவியடியர்முன்வந்தவன்காண் ... *
ஞேயநன்முத்துகிருட்டினமாநகர்ச்சுந்தரனே ... ...(௬௨)

சுந்தரரப்பர்திருஞானசம்பந்தர்சொற்சுவைகூர் ... ...*
செந்தமிழோதநினதன்பர்கூட்டத்தைச்சேரவரந் ... ...*
தந்தருள்வாய்முத்துகிட்ணவளம்பதிதங்குகறைக் .. ...*
கந்தரனேமறைசசெஞ்சிலம்பார்ந்தகவின்பதனே ...(௬௩)

பதமந்திரங்கலைபல்புவனம்வன்னந்தத்துவமிவ் ... ...*
விதமொன்றுமாறத்துவாவிற்பிணித்தவினைகடந்துன் ... *
பதமுண்டகத்திலெளியேனறிவுபதிக்கவரு ... .. ...*
ளிதமன்னுமுத்துகிருட்ணபுரத்துறையெண்குணனே.(௬௪)

குணமாகச்சேடன்றனுவாகமேருகுலவியமால் ... ...*
கணையாகக்கொண்டுதுணிவாகச்சென்றுங்கருதலர்மூன் ...*
ணிணையாவமர்செய்கிலைபல்லைக்காட்டியிருந்தனையென்... *
மணமாருமுத்துகிருட்ணவளம்பதிமன்னவனே... ...(௬௫)

மன்னியதன்னடிப்போதிலொருகைவருபுனலுந்... ...*
துன்னியபச்சிலையுங்கொண்டுபெய்தவர்தொன்றுதொட்டுப்
பின்னியமும்மலம்போக்கிநன்முத்திபெறவளிப்போன்.,*
பொன்னியன்முத்துகிருட்ணபுரீசன்மெய்ப்புங்கவனே(௬௬

புங்கவராய்விண்ணரசாளினுமண்புரக்கினுமென் ... ...*
செங்கனலுப்பண்டவஞ்செய்யினுநின்றிருவடியிற் ... *
றங்கமனத்தைப்பதித்திலரோற்கதிசார்வர்கொலோ ... ...*
சங்கரனேமுத்துகிட்ணபுரத்தொளிர்தண்ணமுதே ...(௬௭)

தண்ணியபூப்பொழிவேள்கேடுங்கல்லெறிசாக்கியராம் ... *
புண்ணியர்வாழ்வும்பொருந்தலினின்னடிக்கன்பிலர்தா ...*
நண்ணியவெத்துணைப்பூப்பெய்யினுங்கதிநண்ணிலரோ ... *
திண்ணியமுத்துகிருட்ணபுரத்திற்றிகழ்பவனே... ... (௪௮)

திகழ்தருமன்னையுமத்தனுஞ்சித்தந்தெளிகுருவு ... ... *
நிகழ்தருதெய்வமுநீயெனத்தேர்ந்துநினையடைந்தேன் ...*
புகழ்தருமுத்துகிருட்ணபுரத்தெம்பொலாமணியே ... *
யிகழ்தருவெம்பவம்போக்கிநின்றாளெனக்கீந்தருளே (௪௯)

அருளேயுருக்கொளுனைப்பாடிடாமலவனிதனின் ... ...*
மருளேறுபுல்லர்தம்மேற்கவிபாடிவறிதுழன்றேன் ... *
றெருளேபெறமுத்துகிட்ணபுரீசதிருவருள்செய்... ...*
பொருளேபொருண்முடிவேவிடையூரும்புராந்தகனே(௫௰

ஊரும்பெயருமுருவுமில்லாமலொளிர்சிவன்றான் ... ... *
றேருங்கரியும்பரியுந்திரியுந்தெருக்கள்வளங் ... ... *
கூருங்கவின்முத்துகிட்ணபுரிக்குட்பொற்கோயிலிடை ...*
யாரும்விழிகொண்டுகண்டுநின்றேத்தவிருந்தனனே ...(௫௧)

இருந்தவர்நெஞ்சவுலோகம்பொன்னாக்கலெளிதுனக்கு ..*
விருந்தமர்நின்கழலாகும்பரிசனவேதியினாற் ... ... ...*
திருந்தலிலென்மனவோட்டையவ்வாறுசெயின்வியப்பா ..*
மருந்தனமார்முத்துகிட்ணபுரத்தெனையாண்டவனே ..(௫௨)

ஆண்டுமதிநாளெனக்காட்டியீர்ந்தடுவாளிலுயிர் ... ...*
பூண்டுறு மென்றுண ரேற்கு மெய்ஞ்ஞானம் பொருந்துறு
நீண்டுறுபொன்னெயின்முத்துகிருட்டிணநீணகர்வாய்[மோ
காண்டரநின்றவனேசோமசுந்தரகண்மணியே... ... (௫௩)

கண்டிடுநல்லுருநான்கருநான்குகருதரிதாக் ... ... ...*
கொண்டவருவுருவொன்றோடொன்பானெனுங்கூறுடையா
வண்டிமிர்தண்டலைமுத்துகிருட்டினமாநகரா... ... [ய
யொண்டொடியார்மயறோயாநெறியெற்குணாத்தருளே(௫௪

உளாயளவைக்குநற்காட்சிகருதலுவமையெனக் ... ... *
களாயளவைக்குமெட்டாநினைஞானநற்கல்வியிலேன் ... *
புளாயளவற்றவுளத்தெங்ஙனுய்வதுபொற்சிகரி ... ... *
வளாயள்வாமுத்துகிட்ணபுரத்தருமாமணியே... ...(ருரு)

மாமலராளிதனைத்தன்படைப்பொடும்வண்டுளவோ... *
னாமவன்றன்னையவன்காப்பொடுமழித்தந்தத்திலே ... *
தோமறத்தங்கலினீயேயிறையெனச்சூழ்ந்தடைந்தேன் ...*
காமணமார்முத்துகிட்ணபுரீசபொற்கற்பகமே ... (ருசா)

கற்புறுநன்மடமாதர்திவழிகான்முளைக ... ... *
ளற்புடனேதொன்மைபாராட்டுசுற்றமமைந்துறவே ... *
பொற்புறுபுண்ணியர்வாழ்முத்துகிட்ணபுரத்திடைமே *
வற்புதநின்னடியென்முடிசூட்டியருள்செய்வையே...(ருஎ)

செய்தவர்க்காணிலிருக்கையெழுந்திகழ்விருந்தா ... *
வெய்தவுவந்தெதிர்கோடலும்வாய்ந்திடுமில்லறத்தோர் ...*
பொய்தபவாழ்தருமுத்துகிருட்ணபுரியுடையான்... ...*
கைதவனீட்டும்பிரம்படிதாங்கியகண்ணுதலே... (ருஅ)

கண்ணருள்கூர்முத்துகிட்ணபுரத்தெங்கடவுளந்தி ... *
வண்ணனற்பன்றிப்பறழ்க்கன்னையாயருள்வாய்ந்துமுன்னாள்
தண்ணமுதூட்டியதற்பரன்றன்னடிசார்ந்தவர்க ... ... *
ளுண்ணமெய்ஞ்ஞானவமுதுவந்தாரவுதவுவனே ...(ருகூ)

வன்புறுகாமக்குரோதமதாதிமறவர்குழாம்... ... ....*
புன்பிறப்பாகியபாலையினேதல்புரியநைவேன் ... ...*
றுன்பொழித்தாண்முத்துகிட்ணபுரீசசுரத்தொருநா ... *
ளன்புடனேவணிகற்குவழித்துணையானவனே ... ...(சாய)

ஆனநினதுபதித்தன்மையுமளியற்குரிய ... ... ... ... *
வீனமதாம்பசுத்தன்மையுங்கன்மத்திலையுமுணர்ந் ... *
தூனமிலாநின்றிருவருளின்வழியுற்றிடச்செய் ... ... *
மேனலமார்முத்துகிட்ணபுரத்தமர்மெய்ச்சுடரோ ... (சாக)

சுடருங்கதிருமொளியுமொப்பாவுயிர்தோறுமொன்று ... *
யடரும்படிநின்றவைமரிப்யோடுதிப்பார்ந்திடச்செய் ... *
திடரின்றிவாழ்முத்துகிட்ணபுரீசனிரங்குங்கொலோ ... *
படரும்பிறப்பிங்கெனையணுகாதுகண்பார்ப்பதற்கே (௬௨)

பாராதிநாதமிறுதியதாகுமுப்பானுடனே ... ... ... *
மீநாராறுதத்துவங்கட்குமெட்டாதநிலைமையெனுஞ் ... ... *
சீரார்கதிநின்பதமென்றறிஞர்தெளிகுவரா ... ... ... *
மேலராருமுத்துகிருட்ணபுரத்துறையெம்மையனே ... (௬௩)

ஐயம்புகினுநற்செய்வினைசெய்யெனுமௌவைசொற்கொண்
டுய்யும்பரிசுணர்ந்துன்றெழும்பேதுமுறுற்றுகிலே ... *
னையும்படிசெய்நமன்வந்தழைக்கையினுனென்செய்கேன் *
வையம்புகழ்முத்துகிட்டணபுரத்தினில்வாழ்வரனே ... (௬௪)

வரமுறுநின்றொண்டராயினர்முன்னுண்மகவரிந்து ... *
திரமுறவூட்டியுந்தந்தையின்றுளைச்சிதைத்துமென்று ... *
உரமுறுநின்னடித்தாமரைத்தொண்டெளிதோவுலகிற் ... *
பரமுறுமுத்துகிருட்ணபுரத்தெம்பழம்பொருளே ... (௬௫)

பொருளேபொருளெனக்கொண்டலையாதுபொருவருநின் *
னருளேயொருளெனக்கொண்டுநின்றுளைக்கண்டஞ்சலிக்க *
வெருளேயகன்முத்துகிட்ணபுரத்தமர்வேதியனே ... ... *
யிருளேய்களத்தவனேயெளியேன்முனெழுந்தருளே (௬௬)

எழுதருநான்மறைபந்தத்தொருமொழியின்பொருளைப் .. *
பழுதறயானுணர்ந்துட்பற்றொழியப்பரிந்தருள்வா ... *
யழுதழுதுன்பதஞ்சேர்வாதவூரற்கருள்புரிந்த ... ... *
தொழுதகையாய்முத்துகிட்ணபுரத்தெழிற்சோதியனே ... ()

சோதித்துத்தத்துவக்குப்பையைநீக்கித்துலங்குநின்றன் ... *
பேதித்திடாநிலையோர்ந்துனைச்சேர்தரும்பெட்பருள்வாய் *
பாதிப்பெண்மேனியனேமுத்துகிட்ணபதிக்கரசே ... ... *
யாதித்தன்சோமனழலாம்விழிகொளைந்தக்கரனே ... (௬௮)

அக்கரம்யாவுமில்லையாமகாரமஃதில்லையே ... ... ... *
லிக்கருத்தின்படிநீயில்லையெலொன்றுமில்லையென்ப ... *
தொக்கவுணர்ந்தனனையமின்றுமிதிலோங்கருளின் ... *
மிக்கவனேமுத்துகிட்டணபுரத்தினின்மேவணலை ... (௬௯)

மேவுந்தனுமுதலாமாயைவெள்ளியதர்ப்பணம்போல்.. ..*
யாவுந்தெரித்தலினஞ்சிலநுணவமென்னுளத்தைத் ... *
தாவுமிருளின்மறைத்தலினஞ்சுவன்றண்பொழில்வாய் ...*
கூவுங்குயின்முத்துகிட்டணபுரத்துமன்கொற்றவனே ...(௭௰)

கொற்றவன்மாறன்பிரம்படிமெய்யுறக்கொண்டுமுடி .. *
யிற்றவமண்சுமந்தும்வாதவூரற்கிரங்குபுவந் .. ... ...*
துற்றவப்பேரருளைக்கண்டடைந்தனனுண்மலங்க .. ... *
ளற்றவர்வாழ்முத்துகிட்டணபுரத்தெம்மருமருந்தே ... (௭௧)

மருந்தேமலநோய்க்ககவிருள்சீத்தெழுவான்சுடரோ ... *
பெருந்தேவர்கட்கும்பெருந்தெய்வமேமலைபெற்றெடுத்த*
முருந்தேய்முறுவலுமைபாகமுத்துகிருட்டணபுரி... ... *
யருந்தேறலேதனிமுத்தித்திருவுக்கருங்கலமே .. (௭௨)

கலங்காமனநல்குசன்மமுத்தாபக்கடல்வெயிற்குக் ... ...*
கலங்காமரமொத்தகங்காளனேயென்கருத்தைவிட்டே ... *
கலங்காமனையெரித்தோய்முத்துகிட்டணக்கடிநகராய் .. ...*
கலங்காமராடையெனவங்கந்தோல்கொள்கங்காதரனே..(௭௩)

கங்கைகுமரிநருமதைசிந்துகண்காவிரிமெய்த் ... ... *
துங்கயமுனைமுதற்பலவாம்புனறோய்ந்திடினும் ... ... *
பங்கமின்ஞானமுறூர்முத்துகிட்டணபதிதனில்வா ... ..*
மங்கையின்மானுடையானைந்தெழுத்தறியாதவரோ ... (௭௪)

அறிவாளரோத்துங்குகனபிதானவேளன்பினுக்கா ... ... *
வெறிவார்கடம்பன்விநாயகனுஞ்சுதர்மென்மலர்த்தார் ...*
செறிவார்குழன்மனையாளுடன்கைலைச்சிவன்சலசப்... ...*
பொறிவாழ்தருமுத்துகிட்டணபுரங்குடிபுக்கனனே ... (௭௫)

குடியுங்குலமுந்தனமுமனமுங்குலாவுமின்னுங் ... ... *
கொடியும்புரையிலட்மாதுமெய்யென்றுகொளல்கனவிற் .. *
படியுமறுசுவையூணுண்டுவக்கும்பரிசந்தமு ... ... *
மடியுமிலாய்முத்துகிட்ணபுரத்துறையங்கணனே ... (௭௬)

கண்ணகன்ஞாலத்துட்புல்லாய்ப்புழுவாய்க்கடிவிலங்கா ... *
யெண்ணலிலாப்பிறப்புற்றிளைத்தேற்கினியெய்ப்பறவே... *
விண்ணவர்சூழ்முத்துகிட்ணபுரீசபொன்மேனியனே. ... *
தண்ணமர்நின்பொற்சரணாம்புயத்திடந்தந்தருளே ... (௭௭)

அருளினைக்கண்டுபரையைத்தரிசித்தகவிருள்போய்த் ... *
தெருளினைமேவுஞ்சிவத்தைமருவித்திகழ்தரச்செய் ... ... *
மருளினையேழைக்குமுத்துகிருட்ணபுரேசமறைப் ... ... *
பொருளினைநால்வர்க்கறிவித்ததத்துவபோதகனே ... (௭௮)

தத்துவமசிமெய்வாக்கியச்செம்பொருடன்னையொழித் ... *
தத்துவிதநல்லிலக்கணையென்னும்பொருளறிந்தியான் ... *
முத்திநிலையினுறவருண்முத்துகிருட்ணபுரி... ... ... *
யுத்தமதத்துவத்தாண்டியிலங்கியவுண்மையனே... (௭௯)

இலங்குதிருமாதுடன்கலைமாதுமிறைஞ்சிடவாழ்... ... *
நலங்கொளுமையாங்குமரியிருக்கநரைதிரைப்பெண் ... *
டுலங்குசடைமீதுறவைத்ததென்கொல்சுடர்மதிதோய் ... *
பொலங்கொளெயிலார்தருமுத்துகிட்ணபுரத்தவனே.. (௮௰)

புரியும்பகையுமுறவுமில்லாமைபுவியறிய... ... ... *
விரியுங்கதிர்மழுவேந்திநின்றனிதென்விண்ணகர்போற்... *
றெரியும்பொழின்முத்துகிட்ணபுரத்துறைதேவனிருட்... *
கரியுந்துகைக்கரும்பேந்தியகாமனைக்காய்ந்தவனே ... (௮௧)

காமவெகுளிமயக்கமிம்மூன்றுங்கழிந்திவற்றி ... ... *
னாமங்கெடக்கெடுநோயெனமேலவர்நாட்டுமொழி ... ... *
யேமமெனக்கொள்கிலாச்சிறியேனுய்வதெவ்வகைநல்... *
வாமங்கெழுமுத்துகிட்ணபுரத்தினில்வாழரனே ... (௮௨)

வாழ்வாஞ்சிவத்தைநிந்திப்பவர்க்குக்கழுவாயிலையென் ...*
றாழ்வாய்ந்திடவிளக்கப்பண்டுதக்கற்குவப்பறவே... ...*
தாழ்வாமதிமுகந்தன்னையியற்றினைதண்ணெனும்பைங் ...*
கூழ்வாய்வயன்முத்துகிட்ணபுரத்தமர்கொன்றையனே....()

அமர்தரும்யாக்கையுந்தந்தையுந்தாயுமனந்தமன்றித்......*
தமர்களுந்தாரமுமக்களுமெண்ணிலர்சார்பிறப்பிற் ... *
சமர்செயுங்காலற்குச்சாலநொந்தேனெனைத்தாங்கியரு ...*
ணிமிர்பொழிலார்முத்துகிட்ணபுரத்துறைநின்மலனே....()

மலமதனாலுற்பவித்திடுபோதின்வருதுயரு ... ... *
நிலமிதிலுற்றபினர்நாடிபேதத்தினேர்துயரு... ... ...*
மலகறவீற்றடைதுன்புநினைதொறுமஞ்சுவல்யா ... ... *
னுலகொளிர்முத்துகிருட்ணபுரத்தினிலுற்றவனே ... (௮௫)

உற்றிடுநாளென்றுவாழ்வொடுதாழ்வுமுறுபகையுஞ் ... *
சொற்றிடுநட்புநன்னாடும்வெங்காடும்பொற்றாசுடனே ...*
யற்றிடுகந்தையுமொப்புறக்காணுமருநிலையான் ... ...*
பெற்றிடுவான்முத்துகிட்ணபுரத்தெந்தைபேரருளே (௮௬)

பேரார்தருமுத்துகிட்ணபுரிவருபிஞ்ஞகன்றன் ... ...*
சீராரருளின்றிமுத்தியைச்சேர்தரச்சிந்தைகொள்ள ... ...*
லேரார்கலமின்றிநீராழியைக்கடந்தேறலொக்கும் ... *
பாராருமன்பதைகாளவன்றாளினைப்பற்றுமினே ... (௮௭)

மின்னையொப்பாகியழிபுவிவாழ்வைவிரும்பியந்தோ [னே
பொன்னை மண்ணைப் பெண்ணை நாடிக்கவன்றுழல் புன்மன
யென்னைமற்றாற்றுவைமாற்றருங்கூற்றமெதிர்வருங்காற் ...*
றன்னையொப்பாமுத்துகிட்ணபுரேசனைச்சார்ந்திலையே....()

சாருஞ்சிருட்டிதிதிசங்கரிப்புமறைப்பெனவே ... ... *
நேருமிந்நான்கும்புசிப்பித்திருவினைநீக்கலினா ... ...*
லாருமுயிர்களின்மீதருளேமேலருளருளே... ... ...*
சேரும்புகழ்முத்துகிட்ணபுரீசற்குத்தேர்ந்திடினே...(௮௯)

மேருப்படியுனக்கூர்பேர்வடிவிலைசேர்ந்தவிச்சை ... *
யோருங்கிரியையுடன்ஞானமாகுமுருவுடையா .. ... *
யாரும்வியப்புறநீதனுவாதியனுக்கட்கென்றே... .. *
நேருஞ்செயன்முத்துகிட்ணபுரீசுரநிட்களனே... ...(௬௰)

நிட்களனாகியணுக்களொடுங்குறநின்றவனும் ... ... ...*
பெட்குமருளிற்றனுவாதியன்னவைபெற்றிடவே... ... *
கட்கமலத்தவன்போற்றச்சகளீகரித்தவனும்... ... ... *
புட்கரமார்முத்துகிட்ணபுரத்துறைபூரணனே .. ...(௬௧)

பூரணமாயகண்டாகாரமாகிமெய்ப்போதவின்பாய் .. ...*
நாரணனான்முகன்போற்றவமர்ந்தருணாயகனன் ... ... *
காரணமாதிதன்னைம்முகத்தேவருதற்கமைந்த ... ... *
காரணன்சீர்முத்துகிட்ணபுரத்தொளிர்கத்தனன்றே...(௬௨)

கத்தனென்னவைந்தொழிற்குஞ்சகமுதற்காரணமா... ... *
நித்தனெனநீயிருக்கப்பிறந்துநிலத்துழலு .. ... ... *
மத்தனாக்கத்தனொன்றுன்னுடன்சேர்ப்பர்மதியிலரோ ... *
சுத்தர்கள்வாழ்முத்துகிட்ணபுரீசசுகோதயனே... ...(௬௩)

தேசவுலகணியாமுத்துகிட்ணவெழினகர்க்கண்... ... ...*
வாசநினைத்தமிழ்கொண்டேத்துந்தொண்டருள்வண்சிவிகை,
யோசைபெறவொருவர்க்களித்தேனையொருவருக்கு... ...*
மாசகலச்செயுமாறுழவாரம்வழங்கலென்னே ... ...(௬௪)

என்னைப்பிறவித்தளையறுத்தாண்டுகொண்டிந்நிலத்தோ ...*
ரன்னைக்கினிமகவாய்ப்பிறவாதருளண்டலரூர் ... ... *
தன்னைத்தழற்றுநகையாளவோர்புறந்தையனுமை ... ...*
மின்னைப்புணர்முத்துகிட்ணபுரீசவிண்வீறமுதே .. (௬௫)

வீறுமயத்திணுண்மேவனல்வெம்மைவிளைப்பதுபோற்...*
றேறுமயன்மாலுருத்திரனுமிவர்சிந்தையினுற் .. ... *
றேறுந்தொழின்மூன்றியற்றலினீபதியென்றறிந்தே ... *
ஞானுஞ்சினமுத்துகிட்ணபுரீசநல்லாரியனே ... ...(௬௬)

ஆருமிதழியுந் தும்பையும்வில்லமுமம்புலியு... ... ...*
நீருமவிர்சடையாய்முத்துகிட்ண நெடுநகராய்... ... *
சாருங்குருடர்கரிகண்டதொக்குநின்றன்னிலையைச்... ...*
சேருமறுசமயத்துழன்மாந்தர்தெளிந்திடலே ... (௯௭)

தெள்ளியசீர்முத்துகிட்ணபுரத்திற்சிறந்திடுவோன் ... *
வெள்ளியவெற்பன்றமியேன்பிறவிமென்பஞ்சினுக்குத் ..*
துள்ளியவெம்பொறித்தீயனையான்றிரைசூழ்கடற்குட்.....*
பள்ளியனன்னத்தையூர்பவன்பேணும்பதாம்புயனே (௯௮)

அம்புயனூர்முடிகொய்திட்டதுநினதங்கைநகம்... ... *
வெம்புரஞ்செற்றது நின்னகைகூற்றினைவீழ்த்ததியா ... *
னம்புநின்றாண்முத்துகிட்ணபுரத்துறைநாதவன ... ...*
சம்புநாகையின்மழுச்சூலந்தாங்கலென்சாற்றுவையே (௯௯)

வையமடந்தைமுகமெனவோங்குமலர்மருவு .. ... ...*
நெய்யவிர்கூந்தலமர்முத்துகிட்ண நெடுநகர்வாழ் ... *
துய்யனெனுஞ்சுந்தரேசனைப்போற்றுநர்துன்னுவரா ... *
ஐயமிலாதிம்மைச்செல்வத்துடன்முத்தியாந்திருவே. ...(௱)

---

## சோமசுந்தரேசரந்தாதி

## முற்றிற்று.

---

அறிவாளரேத்துங் குகனபிதானவேளன்பினுக்கா - என்னும்- ௭௬-ம் -செய்யுட்கு, முருகக்கடவுளது நாமத்தைக்கொண்டிருக்கிற சுப்பராயமுதலியாருடைய அன்புக்காகக்கைலைச்சிவன் குமரவேள் விநாயகமூர்த்தி யென்னும் புதல்வரோடும், உமாதேவியென்னு மனையாளோடும், முத்துகிஷ்ணபுரத்தில்வந்துகுடிபுகுந்தானென்றுபொருள்கொள்க.